# Indian Polity Notes Part 20 in Tamil

## 20. சில வகுப்பினர்கள் தொடர்பான சிறப்பான சட்ட வகைமுறைகள்

### (பகுதி – XVI) (சரத்துக்கள் : 330 – 342)

- பட்டியல் இனத்தவர் (Scheduled Castes), பழங்குடியினருக்கு (Scheduled Tribes) சில பாதுகாப்புகளை அரசியலமைப்பு தருகின்றது.
- பட்டியல் இனத்தவர்கள், பழங்குடியினர் பட்டியலை தயாரிக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- பட்டியல் இனத்தவர்களும், பழங்குடி இனத்தவர்களுக்கும், அசாம் மாநிலத்தில் உள்ள தன்னாட்சி மாவட்டங்களில் பழங்குடி இனத்தவருக்கும், மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவையில் இட ஒதுக்கீடு (Seat reservation) செய்யப்பட்டுள்ளது. (சரத்து – 330)
- மாநிலங்களவை, சட்ட மேலவையில் (Legislative Council) இட ஒதுக்கீடு கிடையாது.
- பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் ஒரு தனி அதிகாரியை (Special Officer) நியமிக்க குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உள்ளது.
- மக்களவையில் இரண்டிற்கு மேற்படாத இடங்களை ஆங்கிலோ இந்தியன்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது, இவர்களை நியமிக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு உள்ளது. (சரத்து – 331)
- மாநில சட்டப்பேரவையில் ஒரு ஆங்கிலோ – இந்தியரை நியமிக்கும் அதிகாரம் ஆளுநருக்கு உள்ளது. (சரத்து – 333).

**பட்டியல் இனத்தவர் ஆணையம்**

**NATIONAL COMMISSION FOR SC (சரத்து – 338)**

- இவ்வாணையம் ஒரு தலைவர், துணைத் தலைவர் மற்றும் 3 உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது.
- பணி மற்றும் பதவிக் காலம் போன்றவைகள் குடியரசுத் தலைவரால் நிர்ணயிக்கப்படுகிறது.
- தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களை குடியரசுத் தலைவர் நியமிப்பார்.
- ஆணையம் தனது நடைமுறையை தானே முறைப்படுத்த அதிகாரம் கொண்டுள்ளது.

**பணிகள்/கடமைகள்**

1. பட்டியல் இனத்தவர்களின் பாதுகாப்பு முறைகள் .குறித்த அனைத்து விசயங்களையும் புலனாய்வு செய்வது, கண்காணிப்பது மற்றும் அதன் செயல்பாடுகளை திறனாய்வு செய்யும்.
2. பட்டியல் இனத்தவர்களின் உரிமை மீறல்/உரிமை மறுப்பு மற்றும் பாதுகாப்பு குறித்த புகார்/முறையீடுகள் குறித்து விசாரணை செய்யும்.

3. பட்டியல் இனத்தவர்களின் சமூக – பொருளாதார வளர்ச்சிக்கான திட்டமிடுதலில் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கும்.
4. பாதுகாப்பு முறை செயல்பாடுகள் குறித்த ஆண்டறிக்கையினை குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பிக்கும்.
5. இதன் ஆலோசனைகளை/பரிந்துரைகளை மத்திய மாநில அரசுகள் செயல்படுத்த (should be) வேண்டும்.
    - இதன் அறிக்கையை குடியரசுத் தலைவர் நாடாளுமன்ற அவைகளில் சமர்ப்பிப்பார்.
6. உரிமையியல் நீதிமன்றத்திற்கு உள்ள அனைத்து அதிகாரங்களும் உள்ளது.
7. மத்திய மாநில அரசுகள் பட்டியல் இனத்தவர்கள் பற்றிய கொள்கைகளில் இவ்வாணையத்தை ஆலோசித்தல் (Shall consult the commission) வேண்டும்.

**பழங்குடி இனத்தவர் ஆணையம்**

**National Commission for ST (சரத்து – 338 – A)**

- ✓ 89 வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் 2003 மூலம் புகுத்தப்பட்டது. இது 19.02.2004 – ல் நடைமுறைக்கு வந்தது.
- ✓ இவ்வாணையம் ஒரு தலைவர், துணைத் தலைவர் மற்றும் 3 உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது.
- ✓ பணி மற்றும் பதவிக் காலம் போன்றவைகள் குடியரசுத் தலைவரால் நிர்ணயிக்கப்படுகிறது.
- ✓ தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் குடியரசுத் தலைவர் நியமிப்பார்.

**பணிகள்/கடமைகள்**

1. பழங்குடி இனத்தவர்களின் பாதுகாப்பு முறைகள் குறித்த அனைத்து விசயங்களையும் புலனாய்வு செய்வது, கண்காணிப்பது மற்றும் அதன் செயல்பாடுகளை திறனாய்வு செய்யும்.
2. பழங்குடி இனத்தவர்களின் உரிமை மீறல்/ உரிமை மறுப்பு மற்றும் பாதுகாப்பு குறித்த புகார்/முறையீடுகள் குறித்து விசாரணை செய்யும்,
3. பழங்குடி இனத்தவர்களின் சமூக – பொருளாதார வளர்ச்சிக்கான திட்டமிடுதலில் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கும்.
4. பாதுகாப்பு முறை செயல்பாடுகள் குறித்த ஆண்டறிக்கைனை குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பிக்கும்.
5. இதன் ஆலோசனைகளை/பரிந்துரைகளை மத்திய மாநில அரசுகள் செயல்படுத்த (Should be) வேண்டும். (இதன் அறிக்கையை குடியரசுத் தலைவர் நாடாளுமன்ற அவைகளில் சமர்ப்பிப்பார்)
6. இதற்கு உரிமையியல் நீதிமன்றத்திற்கு உள்ள அனைத்து அதிகாரங்களும் உள்ளது.
7. மத்திய மாநில அரசுகள் பட்டியல் இனத்தவர்கள் பற்றியக் கொள்கைகளில் இவ்வாணையத்தை ஆலோசித்தல் (Shall) வேண்டும்.

- இந்திய அரசியலமைப்பு அமலுக்கு வந்து ஒவ்வொரு 10 ஆண்டு நிறைவிலும் பட்டியலினத்தவர் வாழும் இடங்களின் நிர்வாகம் மற்றும் பழங்குடியினர் நலன் குறித்து அறிக்கை தர ஒரு ஆணையத்தை நியமித்தல் வேண்டும் (சரத்து – 339).

**பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆணையம் (சரத்து – 340)**

- சமுதாய மற்றும் கல்வியில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக குடியரசுத் தலைவர் ஒரு ஆணையம் நியமிக்கலாம்.
- இவ்வாறு நியமிக்கப்பட்ட ஆணையம் அதற்கு ஒதுக்கப்பட்ட விடயங்களை புலனாய்வு செய்து குடியரசுத் தலைவரிடம் அறிக்கை அளிக்கும்.

**சரத்து – 341 (பட்டியல் இனத்தவர்கள்)**

- பட்டியல் இனத்தவர்கள் எனக் கருதப்படும் ஜாதி, இனம், பழங்குடிகள் போன்றவர்களை அறிவிக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு உள்ளது.
- இவ்வாறு அறிவிக்கப்படும் சாதி, இனம், பழங்குடிகள் போன்றவர்களை அப்பிரிவிலிருந்து விடுவிக்க நாடாளுமன்றம் அதிகாரம் பெற்றுள்ளது.

**சரத்து – 342 (பழங்குடி இனத்தவர்கள்)**

- பழங்குடி இனத்தவர்கள் எனக் கருதப்படும் ஜாதி, இனம், பழங்குடிகள் போன்றவர்களை அறிவிக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு உள்ளது.
- இவ்வாறு அறிவிக்கப்படும் சாதி, இனம், பழங்குடிகள் போன்றவர்களை அப்பிரிவிலிருந்து விடுவிக்க நாடாளுமன்றம் அதிகாரம் பெற்றுள்ளது.